1979 மார்ச் 5]

மாண்புமிகு திரு. கா. காளிமுத்து : பேரவைத் தலைவரவர்களே, இக்கேள்விக்குரிய பாதையின் மூன்று பகுதிகள் அங்கீங்கரிக்கப்பட்ட நகரமைப்புத் திட்டங்கள் 9, 10 மற்றும் 11 ஆகிய மூன்று திட்டங்களிலும் அமைந்துள்ளது. இதற்கு தேவையான நிலத்தின் ஒரு பகுதியாக அரசு நிலத்தையும் இன்னொரு பகுதியாக தனியார் நிலத்தையும் எடுத்துக்கொண்டுவிட்ட பிறகு அந்தப்பணி மேற்கொள்ளப்படும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன். இது ஆரம்பிக்கப்பட்ட காலம் பற்றிய தகவலோ, மதிப்பீடு பற்றிய தகவலோ, என்னிடத்திலே இல்லை என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

கூடலூர் தொகுதியில் குடிசைப் பகுதிகள்.

* வினா எண். 226—திரு. கே. உச்சி: மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) நீலகிரி மாவட்டம் கூடலூர் தொகுதியில் எவ்வளவு குடிசை வாழ் மக்கள் உள்ளார்கள்?

(ஆ) அந்த மக்களுக்கு குடிநீர், பாதை, விளக்கு போன்ற வசதிகள் செய்து கொடுக்க என்ன நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது?

மாண்புமிகு திரு. கா. காளிமுத்து : (அ) 4347.

(ஆ) ஊராட்சிகளே தக்க நடவடிக்கை எடுத்து வருகின்றன.

சென்னை நகராட்சிப் பகுதிகளில் கழிவுநீரகற்றுதல்.

*வினா எண். 227—திரு. டி. கே. கபாலி : மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா —

(அ) சென்னை நகராண்மைக் கழக லாரிகளில் கொண்டு வரப்படும் கழிவுநீர் அடையாற்றில் விடப்படுவது அரசுக்குத் தெரியுமா?

(ஆ) ஆம் எனில், அது குறித்து எடுக்கப்பட்ட நடவடிக்கை யாது?

[1979 மார்ச் 5

மாண்புமிகு திரு. கா. காளிமுத்து : (அ) சென்னை மாநகராட்சி லாரிகளில் கொண்டு வரப்படும் கழிவுநீர் அடையாற்றில் விடப்படுவதில்லை.

(ஆ) இப்பிரச்னை எழவில்லை.

திரு. சென்னை மு. அரங்கநாதன் : அடையாறைப் போன்று நுங்கம்பாக்கத்தின் கோடியில் கூவம் ஆற்றில் கழிவுநீரை மாநகராட்சியினர் விடுகிறார்கள். அதையும் தடுக்க அரசு முன்வருமா?

மாண்புமிகு திரு. கா. காளிமுத்து : மூலக் கேள்வி அடையாறு பற்றியது. கூவம் பற்றி தனிக் கேள்வி போடவும்.

அன்னூர் குடிநீர்த் திட்டம்.

*வினா எண். 228— திரு. சொ. ந. பழனிசாமி : மாண்புமிகு தொழிலாளர் நலத் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) வழியோரக் கிராமங்களும், குடி தண்ணீர் விநியோகம் பெறும் வகையில் கோவை மாவட்டம் அன்னூருக்கு குடிநீர் குழாய் இணைப்பு வழங்குவது தொடர்பாக அரசு என்ன நடவடிக்கை எடுத்துள்ளது?

(ஆ) தண்ணீர் வரும் அளவை அதிகரிக்கும் வகையில், அபிவிருத்தி வேலைகள் இந்த ஆண்டில் செய்து முடிக்க என்ன நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது?

மாண்புமிகு திரு. எஸ். இராகவானந்தம் : (அ) நடவடிக்கை எதுவும் எடுக்கப்படவில்லை.

(ஆ) திருப்பூர் நகராட்சி குடிநீர் மேம்பாட்டுத் திட்டம் முடிவுற்றதும், இது பற்றி தனியே பரிசீலிக்கப்படும்.

திரு. சொ. ந. பழனிசாமி : அன்னூர் பேரூராட்சியின் மக்கள் தொகை கிட்டத்தட்ட 10,000-க்கு மேற்பட்டிருக்கிறது. அங்கே தற்போது நான்கு குழாய்கள்தான் அமைக்கப்பட்டிருக்கின்றன. அன்னூருக்கு குடிநீர் குழாய்கள் 24 தருவதாக குடிநீர் வடிகால் வாரியத்துடன் ஒரு ஒப்பந்தம் செய்யப்பட்டு அன்னூர் பேரூராட்சி குறிப்பிட்ட ஒரு தொகையை அதற்காக கட்டியுள்ளதும் அரசுக்குத் தெரியுமா? அதன்படி தற்போது அமைக்கப்பட்டுள்ள குழாய்கள்போக மீதி உள்ள குழாய்கள் எப்போது அமைக்கப்படும்?